

# பரிசுத்த பவுல் ஆலயம், குவைத்

## அஹமதி தமிழ் திருச்சபை

# "அவர் இங்கே இல்லை; தாம் சொன்னபடியே உயிர்த்தெழுந்தார்."

மத்தேயு 28:6

செய்தி மலர்
2023
ஏப்ரல்

இதழ் : 12
மலர் : 19



# சபை செயலாளர் அன்பு மடல்



கர்த்தருடைய மகா பரிசுத்த நாமத்திற்கு ஸ்தோத்திரம் உண்டாவதாக. கிறிஸ்துவுக்கு மிகவும் பிரியமான சபையோரை இயேசு கிறிஸ்துவின் இனிதான நாமத்தில் வாழ்த்துக்கள். கடந்த மார்ச் மாதம் முழுவதும் நம்மை கண்ணின் மணி போல பாதுகாத்த தேவன் இந்த ஏப்ரல் மாதம் முழுவதும் நம்மை காத்து நடத்துவாராக உயிர்த்தெழுந்த இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் சபையோருக்கு ஈஸ்டர் வாழ்த்துதல்களை செயற்குழு மூலம் தெரிவித்து கொள்கிறோம்.

## "அவர் இங்கே இல்லை; தாம் சொன்னபடியே உயிர்த்தெழுந்தார்." மத் 28:6.

இயேசு சொன்னபடியே உயிரோடு எழுந்தார். அவரை தரிசிக்க வந்த ஸ்திரீகளை நோக்கி தேவதூதன், "தாம் சொன்னபடியே உயிர்த்தெழுந்தார்" என்றான் மத் 28:6. கிறிஸ்து சொன்னபடி செய்கிறவர், வாக்குமாறாதவர். பொய்யுரைக்க ஒரு மனிதனல்ல, மனம் மாற ஒரு மனுஷனுமல்ல. "அவருடைய நல் வார்த்தைகளில் எல்லாம் ஒரு வார்த்தையானாலும் தவறிப் போகவில்லை" 1ராஜா 8:56. அவர் சொன்னபடியே உயிர்த்தெழுந்தார், வானமும் பூமியும் ஒழிந்து போம், என் வார்த்தைகளோ ஒழிந்துபோவதில்லை. மத் 24:35.

கிறிஸ்து உயிர்த்தெழுந்தவர்களில் முதற்பலனாகி, மனுக்குலத்துக்கு உயிர்த்தெழுதலின் நம்பிக்கையை கொடுத்தார். கிறிஸ்துவை மரித்தோரிலிருந்து எழுப்பினவருடைய ஆவி, உங்களுக்குள்ளே வாசமாயிருக்கு என்றால், சாவுக்கேதுவான உங்களுடைய சரீரத்தையும் அவர் உயிர்ப்பிப்பார். ரோமர் 8:11.

கிறிஸ்துவுக்கு முன்னால், பலர் உயிரோடு எழுப்பப்பட்டிருக்கிறார்கள். சாறிபாத் விதவையின் மகனை எலியா உயிரோடு எழுப்பினார். சூனேமியாளின் மகளை எலிசா உயிரோடு எழுப்பினார். இயேசு லாசருவை, யவீருவின் மகள், நாயீனூர் விதவையின் மகன் ஆகிய மூன்று பேரை உயிரோடு எழுப்பினார். அப்படி எழுப்பப்பட்டவர்கள், மாம்ச சரீரத்தோடு எழுந்தபடியால், மீண்டும் மரித்தார்கள்.

ஆனால் இயேசு உயிரோடு எழும்பின போது, உலகப்பிரகாரமான சரீரத்தோடு அல்ல, மருரூபமாக்கப்பட்ட, புதிய ஆவீக்குரிய சரீரத்தோடு எழுந்தார். மரணமே அடையமுடியாத வல்லமையான சரீரத்தோடு உயிர்த்தொழுந்தார். ஆகவே யூத ராஜசிங்கம் உயிர்தெழுந்தார், உயிர்தெழுந்தார் நரகை ஜெயித்தெழுந்தார் என்று பாடுகிறோம்.

கிறிஸ்துவின் மூலம் உயிர்தெழுதலின் நம்பிக்கை வந்தது கடைசி எக்காளம் தொனிக்கும் போது, கிறிஸ்துவுக்குள் மரித்தவர்கள், முதலாவது எழுந்திருப்பார்கள். பின் உயிரோடிருக்கும் நாமும் இமைப்பொழுதில் மறுரூபமாக்கப்படுவோம். அப்பொழுது நம்முடைய சரீரம், மாம்ச சரீரமாயிருக்க போவதில்லை.கிறிஸ்துவின் உயிர்த்தெழுதலின் சரீரம் போலவே, ஆவிக்குரிய சரீரமாக மாறிவிடும். இயேசு உயிர்த்தெழுந்தபோது அந்த சரீரம் விசேஷமானதாயிருந்த படியால், பூட்டப்பட்ட அறைக்குள்ளே செல்ல முடிந்தது. ஒரே நேரத்தில் ஐந்நூறுக்கும் அதிகமானவர்களுக்கு தரிசனமாக முடிந்தது. அந்த உயிர்த்தெழுந்த சரீரத்தோடு, எளிதாக மேகங்கள் மேல் ஏறி, பரலோகத்துக்கு எடுத்துக் கொள்ளப்பட முடிந்தது. உயிர்த்தெழுந்த இயேசு பேசிய வார்த்தைகளை தியானிப்போம்.

## 1.வாழ்க:

உயிர்த்தெழுந்த இயேசுதாமே சீஷர்களுக்கு எதிர்ப்பட்டு வாழ்க என்றார். மத் 28:9. இயேசுகிறிஸ்து வாழ்க என்று சொன்னது ஆங்கிலத்திலே “Hail” என்று அழைக்கப்படுகிறது. அதற்கு உற்சாகமடையுங்கள், களிகூருங்கள், மகிழ்ந்து கொண்டாடுங்கள் என்றெல்லாம் அர்த்தமாகும். உதாரணமாக தாவீது, கோலியத்தை எதிர்த்து, தைரியமாய் புறப்பட்டு போய் தமது கவணிலுள்ள கல்லினாலே வீழ்த்தி, அவனுடைய தலையை வெட்டி எடுத்துக் கொண்டு வந்தது, இஸ்ரவேலருக்கு எத்தனை களிகூருதாலாயிருந்திருக்கும். உயிர்த்தெழுந்த இயேசுகிறிஸ்துவும் ‘வாழ்க’ (Hail) சத்துருவான பிசாசு விழுந்தான், அவனுடைய தலை நசுக்கப்பட்டு அழிந்தது, அவனுடைய கிரியைகள் அழிக்கப்பட்டுவிட்டன. மரணத்திற்கும், பாதாளத்திற்குமுரிய திறவு கோல்களை அவன் கையிலிருந்து பிடுங்கி விட்டேன். மரணத்தின் அதிபதியான பிசாசை, என் மரணத்தினாலே வென்றுவிட்டேன். ஆகவே மகிழ்ச்சி களிகூருங்கள் என்கிறார். ஈஸ்டர் தினத்தில் நீங்கள் “வாழ்க” என்று சொல்லும்போது, அதிலே உங்கள் உள்ளத்தில் பொங்கி வருகிற மகிழ்ச்சியின் சந்தோஷம் இருக்கட்டும்.

"என்மீட்பர் உயிரோடிருக்கிறார்" என்று சொல்லி மகிழுங்கள் கர்த்தருக்குள் மகிழ்ச்சியாயிருப்பதே உங்களுடைய பெலன். நெகே 8:10.

## 2.பயப்படாதிருங்கள்:

அப்பொழுது இயேசு அவர்களை நோக்கி: பயப்படாதிருங்கள் நீங்கள் போய், என் சகோதரர் கலிலேயாவுக்குப் போகும்படி அவர்களுக்கு சொல்லுங்கள் என்றார்.

"தேவன் நமக்கு பயமுள்ள ஆவியையே கொடுத்திருக்கிறார்" (II தீமே 1:7) அந்தப்படி திரும்பவும் பயப்படுகிறதற்கு, நீங்கள் அடிமைத்தனத்தின் ஆவியை பெறாமல், அப்பா பிதாவே என்று கூப்பிட பண்ணுகிற புத்திரசுவிகாரத்தின் ஆவியைப் பெற்றீர்கள் (ரோமர் 8:15). உயிரோடு எழுந்த இயே 'நீ பயப்படாதே' என்கிறார் காரணம், அவர் மரணத்திற்க்கும், பாதாளத்திற்க்கும் உாயி திறவு கோல்களை, சாத்தானின் கையில் இருந்து பிடுங்கிவிட்டர் (வெளி 1:118) இனி மரணமே உன் கூர் எங்கே பாதாளமே உன் ஜெயம் எங்கே என்று சவாலோடு வெற்றி முழுக்கமிட முடியும்.

இயேசு சொன்னார் நானே, உயிர்த்தெழுதலும் ஜீவனுமாய் இருக்கிறேன் என்னை விசுவாசிக்கிறவன் மரித்தாலும் பிழைப்பான். யோவான் 11:25. கர்த்தருடைய வருகையிலே உயிரோடு இருக்கும் நாமும், மரணத்தை ஜெயமாய் விழுங்குவோம். மிகிழ்ச்சியோடு கிறிஸ்துவக்கு எதிர்கொண்டு போவோம்.

## 3.உங்களுக்கு சமாதானம்:

"வாரதத்தின் முதல் நாளாகிய அன்றையதினம் சாயங்கால வேளையிலே, சீஷர்கள் கூடியிருந்த இடத்தில் யூதர்களுக்கு பயந்ததினால் கதவுகள் பூட்டியிருக்கையில், இயேசு வந்து நடுவே நின்று; உங்களுக்கு சமாதானம் என்றார். யோவான் 20:19.

இந்த உயிர்த்தெழுதலின் நாளிலே, கர்த்தர் உங்களுக்கு சமாதானம் தருவார். உங்கள் குடும்பத்திலேயும், வேலை ஸ்தலங்களிலேயும் சமாதானத்தை கட்டளையிடுவார் உயிர்த்தெழுந்தவர் சமாதானம் கர்த்தர் (ஆதி 49:10), சமாதான பிரபு (ஏசா 9:6) சமாதான காரணர் (மீகா 5:5) சமாதானத்தின் தேவன் (ரோமர் 16:20) சமாதானத்தின் ராஜா (எபி 7:2) இன்றைக்கு அவர்

எல்லா புத்திக்கும் மேலான தேவசமாதானத்தால் உங்களை நிரப்பி அருள்வார்.

**பூரண சமாதானத்தை பெற்றுக்கொள்ள வேண்டுமா?**

"உம்மை உறுதியாய்ப் பற்றிக் கொண்ட மனதையுடையவன் உம்மையே நம்பியிருக்கிறபடியால், நீர் அவனைப் பூரண சமாதானத்துடன் காத்துக்கொள்வீர்." ஏசா 26:3.

இன்று ஜனங்ள் சமாதானம் இல்லாமல் தத்தளிக்கிறார்கள் தேசங்கள் மேல், யுத்த மேகங்கள் நிழலிட்டு இருக்கின்றன. இயற்கையின் பேரழிவுகள் ஒரு ஒரு நாளும் பயமுறுத்துகின்றன. குற்றமனசாட்சி இரவும் பகலும் வாதிப்பதால், தேவகோபாக்கினை வந்துவிடுமோ என்ற மனவேதனையும் சமாதானத்தை கெடுக்கிறது. துன்மார்கருக்கு சமாதானம் இல்லை. ஏசா 48:22. மரித்து உயிர்தெழுந்து இயேசுவிடம் நமது பாவங்களை அறிக்கையிட்டால் நம்முடைய பாவங்களை மன்னித்து நமக்கு சமாதானம் அருள்வார். உயிர்த்தெழுந்த இயேசு முதலாவது தம்முடைய சீஷர்களை பார்த்து, "உங்களுக்கு சமாதானம் என்று சொன்னார். இரண்டாவது எம்மாவூருக்கு போன சீஷர்களிடம், உங்களுக்கு சமாதானம் என்று சொன்னார்.

## 4.சகோதரர்களுக்கு சொல்லுங்கள்:

"அப்பொழுது இயேசு அவர்களை நோக்கி; பயப்படாதிருங்கள் நீங்கள் போய் என் சகோதரர் கலிலேயாவுக்கு போகும்படி அவர்களுக்கு சொல்லுங்கள். அங்கே அவர்கள் என்னை காண்பார்கள் என்றார்." (மத் 28:10).

நேற்றும் இன்றும் என்றும் மாறாத இயேசு கிறிஸ்து நம்மை பார்த்து பயப்படாதிருங்கள் என்று சொல்கிறார். வேதனைகளோ, சோதனைகளோ, அவமானங்களோ, நிந்தைகளோ, நெருக்கங்களோ வந்தாலும் நம்மை வெட்கப்படுத்தாத தேவன் நமக்கு உண்டு பயப்படவேண்டாம். இந்த உயிர்த்தெழுந்த கிறிஸ்துவை பற்றி அறியாத ஜனங்கள், உண்டு மரணத்தை ஜெயித்து, உயிரோடு எழுந்தவரைப் பற்றி அவர்களுக்கு சொல்லுங்கள். கிறிஸ்து ஒருவரே பாவங்களை மன்னித்து, இரட்சிப்பை தருகிறார்" என்பதை சொல்லுங்கள். தேவன்தாமே நம் ஒவ்வொருவரையும் ஆசீர்வதிப்பாராக.

சபையின் செயலாளர்,

**சகோ. ஏசுரெத்தினம்**

# மறைவான மன்னா

கொத்து மல்லி விதை போன்று
முத்தைப்போல் நிறம் கொண்டு
தேனிட்ட பணிகாரம் – என்
தேவனால் கிடைத்தன்று...

இரவு நேரத்திலே
பனி பெய்யும் வேளையிலே
தேவரீர் அப்பத்தை
வருஷிக்க செய்தீரே

பாலை வனத்தினிலே
பசியோடு நான் வாடுகையில்
ஆண்டவரே என்றழைத்து – நான்
ஆகாரம் கேட்கின்றேன்

வானத்தின் கதவுகளை –உம்
வார்த்தையால் திறக்கச் செய்து
தூதர்கள் அப்பத்தை உம் அநாதி சிநேகத்தால்
எனக்காக கொடுத்தீரே

மன்னவரின் கிருபையில் –புசிக்க
மன்னாவை கொடுத்தீர் அன்று
மறைவான மன்னாவை தருவேன் என்றீரே
மனம் திரும்பி வருகின்றேன்
உம் வருகைக்கு ஆயத்தமாய்....

கிறிஸ்துவின் பணியில்,
சகோதரி. வனித்தா காளிமுத்து

## தேவ செய்தி

நம்முடைய கர்த்தராகிய இயேசுவின் இனியநாமத்தில் இந்த செய்தி மலர் வழியாக வாழ்த்துதல் சொல்லிக்கொள்கிறேன். கடந்த மாதம் முழுவதும் கண்மணிபோல காத்த தேவனுக்கு நன்றி தெறிவித்துகொள்கிறேன்.

இந்த நாட்களில் சிலுவையைக் குறித்ததான செய்திகளையும் அவர் நமக்காக பட்ட பாடுகளையும் சிலுவை தொடர்பான தியானத்தையும் கேட்கிறோம் வாசிக்கிறோம்,சிலர் தவக்காலம் என்று பலர் சில விதிமுறைகளை கைக்கொள்கிறார்கள்,உணவில் பல மாற்றங்கள் உடையில் செயலும் சில மாற்றங்களை செய்துகொள்கிறார்கள். எவைகள் எப்படி இருந்தாலும் உண்மையான தெய்வத்தை அறிவதற்க்கு தங்களை தாழ்த்தி தேவனை தேடுகிற மக்கள் இருக்கிறார்கள் இந்த நாட்களில் அதிகமாக இருக்கிறார்கள் ஆனால் வெளித்தோற்றமான செயல்களை நாம் காண்கிறோம்.

ஒன்றான மெய்த்தேவனாகிய உண்மையும் நீர் அனுப்பினவராகிய இயேசு கிறிஸ்துவையும் அறிவதே நித்திய ஜீவன். நீர் (பிதாவானவர்) உம்முடைய குமாரனுக்கு தந்தருளின யாவர்க்கும் அவர் நித்தியஜீவனைக் கொடுக்கும்பொருட்டு மாம்சமான யாவர் மேலும் நீர் அவருக்கு அதிகாரம் கொடுத்தபடியே என்று யோவான் 17: 3,2 வாசிக்கிறோம்.

அவர் சிலுவையில் சிந்தின இரத்தத்தினாலே சமாதானத்தை உண்டாக்கி பூலோகத்திலுள்ளவைகள் பரலோகத்திலுள்ளவைகள் யாவையும் அவர்(இயேசுவின்)மூலமாய் தமக்கு ஒப்புரவாக்கிக்கொள்ளவும் அவருக்கு (பிதாவுக்கு) பிரியமாய்யிற்று .கொலோ 1:20

இதை பிதாவானவர் எப்பொழுது நிறைவேற்றினார் என்றால் அவருடைய குமாரன் இயேசு மாம்சசரீரத்தில் அடைந்த மரணத்தினாலேயே இப்பொழுது ஒப்புரவாக்கினார்,எப்படியெனில் குமாரானகிய அவருக்குள் அவருடைய இரத்தித்தினாலே பாவமன்னிப்பாகிய மீட்பு நமக்கு உண்டாயிருக்கிறது. கொலோ 1:14.

பழைய ஏற்ப்பாட்டு காலத்தில் பாவ நிபித்தி செய்யும்படியாக பலிகளைசெலுத்தி அதன் மூலமாக ஜனங்களின் பாவங்களை போக்கி ஜனங்களை பரிசுத்தப்படுத்த தேவன் ஆரோனை ஆசாரியர்கள் மூலமாக நிறைவேற்றுவார்.

உங்கள் சித்ததுக்காக லேவிய 16:21-34 இந்த பகுதியை வாசித்துப்பாருங்கள். இஸ்ரவேல் புத்திரருடைய சகல அக்கிரமத்தையும் எல்லா பாவங்களையும் சகல மீறுதல்களையும் அறிக்கையிட்டு அவைகளை வெள்ளாட்டுக்கடாவுடைய தலையின் மேல்

சுமந்து என்று வாசிக்கிறோம். பாவநிவாரண பலியாக வெள்ளாட்டுக் கடாவையும் பாளையத்திற்கு புறம்பே கொண்டுபோய், அவைகளின் தோலையும் மாம்சத்தையும் சாணியையும் அக்கினியிலே சுட்டெரிக்கக்கடவர்கள்.அவைகளைச் சுட்டெரித்தவன் தன் வஸ்திரங்களைத் தோய்த்து, ஜலத்திலே ஸ்நானம்பண்ணி, பின்பு பாளயத்துக்குள் வருவானாக.

மெய்யாகவே அவர் நம்முடைய பாடுகளை ஏற்றுக்கொண்டு நம்முடைய அக்கிரமங்களை சுமந்தார். நாமோ அவர் தேவனால் அடிபட்டு வாதிக்கப்பட்டு சிறுமைப் பட்டார் என்னினோம். நம்முடைய மீறுதலின் நிமித்தம் அவர் காயப்பட்டு நம்முடைய அக்கிரமங்களின் நிமித்தம் நொருக்கப்பட்டார். நமக்கு சமாதானம் உண்டாக்கும் ஆக்கினை அவர்கள் மேல் வந்து அவருடைய தழும்புகளால் குணமாகியோறாய் கர்த்தரோ நம் எல்லாருடைய அக்கிரமத்தையும் அவர் மேல் விழ பண்ணினார். ஏசா 53:4-6-ல் வாசிக்கிறது போல பூமியில் உள்ள எல்லா ஜனங்களின் பாவங்களை அவருடைய குமாரனாகிய இயேசுவின் மேல் விழப்பன்னினார் .எபி 9:11-15.

லூக்கா 11:52-53 நியாயசாஸ்திரிகளே, உங்களுக்கு ஐயோ, அறிவாகிய திறவுகோலை எடுத்துக் கொண்டீர்கள், நீங்களும் உட்பிரவேசிக்கிறதில்லை, உட்பிரவேசிக்கிறவர்களையும் தடைபண்ணுகிறீர்கள் என்றார். சுமப்பதர்க்குறிய பாறமான சுமைகளை கட்டி மனுஷர் தேலின் மேல் சுமத்துகிறார்கள். தாங்களோ ஒரு விரலினாலும் அவைகளை தொட மாட்டார்கள். ஒருவனை உங்கள் மார்க்கத்தானாக்கும்படி சமுத்திரத்தையும், பூமியையும் சுற்றித் திரிகிறீர்கள் அவன் உங்கள் மார்க்தானன போது அவனை உங்கிளிலும் இரட்டிப்பாய் நரகத்தின் மகனாக்குகிறீர்கள். மத் 23:4,5.

இப்படித்தான் இன்றைய கிறிஸ்துவ உலகில் மக்கள் வாழ்கிறார்கள் சபையிலும், வெளியிலும் இதை அதிகமாக பார்க்கிறோம். சபையிலே எத்தனை வருடங்களாக இருந்தாலும் எவ்விதமான பொறுப்புகளையோ, ஊழியங்களையே செய்ய முன் வரமாட்டார்கள். ஆனால் ஊழியம் செய்கிறவர்களையும் செய்ய விட மாட்டார்கள். அதனால்தான் இந்தியர் வாழும் எந்த நாட்டிலும் சபை உயிர் மீட்ச்சி அல்லது சபையின் ஐக்கியம் காண்பது அறிதாக உள்ளது. மாறாக சபைகள் பிளவுகளைதான் அதிமாக பார்க்க

முடிகிறது. எந்த ஒரு மனுஷனும் ஒரே சபையில் நிலைக்காமல் எல்லா சபையிலும் சென்று தம்மை உயர்த்திக் கொள்கிறாறோ அவர்கள் தேவனில் நிலைத்து இருக்கிறார்கள் என்று எப்படி சொல்ல முடியும். ஒருவன் என்னில் நிலைத்திராவிட்டால், வெளியே எறியுண்ட கொடியைப்போல அவன் எறியுண்டு உலர்ந்து போவான்; அப்படிப்பட்டவைகளைச் சேர்த்து, அக்கினியிலே போடுகிறார்கள்; அவைகள் எரிந்துபோம்.நீங்கள் என்னிலும், என் வார்த்தைகள் உங்களிலும் நிலைத்திருந்தால், நீங்கள் கேட்டுக்கொள்வதெதுவோ அது உங்களுக்குச் செய்யப்படும்.நீங்கள் மிகுந்த கனிகளைக் கொடுப்பதனால் என் பிதா மகிமைப்படுவார், எனக்கும் சீஷராயிருப்பீர்கள். யோவான் 15:6-8.

நாம் கிறிஸ்துவர்கள் என்று சொல்லியும் வாழ்க்கை கனியற்று காணப்படாத படிக்கு கனியுள்ள வாழ்க்கை வாழ்ந்து கிறிஸ்துவின் சுவிசேஷத்தினால் அனேகரை கிறிஸ்துவுக்குள் வாழ,வழி நடத்திட தேவன் நம் சபையில் உள்ள அனைவரையும் பயன்படுத்துவாராக என்று ஜெபத்துடன் முடிக்கிறேன். ஆமென்.

கர்த்தரின் பனியில்,
சகோ.பால் ஜெகநாதன்

## வாலிபர் பகுதி

## வேதத்தை ஏன் வாசிக்க வேண்டும்?

"வாலிபன் தன் வழியை எதினால் சுத்தம்பண்ணுவான்? உமது வசனத்தின்படி தன்னைக் காத்துக்கொள்ளுவதினால்தானே." சங் 119:9. ஒரு வயதான முதியவர் தன் மகனுடைய குடும்பத்தோடும் பிள்ளையோடும் வாழ்ந்து வந்தார். தினமும் காலையில் அவர் எழுந்து வேதாகமத்தை வாசிப்பது வழக்கம். அவருடைய பேரன் அவர் செய்வதுப் போல அவனும் தன் வேதாகமத்தை எடுத்து வாசிக்க முயற்சி செய்வது வழக்கமாக இருந்தது. ஒரு நாள் பேரன் தன் தாத்தாவிடம், 'தாத்தா நீங்கள் செய்வதுப் போல நானும் வேதத்தை எடுதது வாசித்துப் பார்க்கிறேன். ஆனால் எனக்கு அதில் ஒன்றும் புரியவில்லையே? அதுவும் நான் வேதத்தை மூடியவுடன் என்ன படித்தோம் என்பதையே மறந்து போகிறேனே ஆகையாலட வேதத்தை என்ன பயன்? என்று கேட்டான்.

(தொடர்ச்சி 14-ஆம் பக்கத்தில்)

..உன் சந்ததியை மிகவும் பெருகப்பண்ணுவேன்@

... (ஆதி – 16:10)

## இந்த மாதம் பிறந்த நாளை சிறப்பிக்கிறவர்கள்

செல்வி. ஆன்ட்ரியா மகதலேனா தாஸ்
சகோ. திவ்யராஜ்
செல்வன். ஜெரால்டு ஜெஸ்டின்
சகோதரி. ஷீஜா கிருஸ்டோபர்
சகோ. ஃபிராங்கிளின்
சகோ. ரிச்சர்ட்சன் டேனியல்
சகோ. சதீஷ் ராஜேந்திரன்
செல்வன்.ஆபி சுந்தர்
செல்வன். மதன் ராஜ் மகேஷ்ராஜ்
செல்வன். ஆன்டர்சன் அறிவுச்சுடர்
செல்வி. தியா யாழினி சுபின் சிங்
சகோ. ஜோசப் பாபுராஜ்
சகோதரி. சோஃபியா வசந்தா மேரி
சகோ.ஜெய் சாம் டேனியல்
செல்வி. ஜோயன் ஜாஃப்ரீனா
செல்வி. ஜோயன் ஹாஃரீனா
சகோ. சுகுமார்
சகோ.பென்சாம்
சகோ.குமாரசாமி
செல்வி. கிறிஸ்டீனா வினீஷ்
சகோதரி. கலாராணி ஜெயக்குமார்
சகோ. ஜிவல்சிங்

சகோ. பால் ஜெகநாதன்
சகோதரி. நிஷாந்தி விஜயன்
சகோதரி.தேர்னி பீட்டர்
சகோதரி. பத்மினி வர்கீஸ்
சகோ. ரவி ஜாண் பீட்டர்
செல்வி. வின்சி டேவிட்
செல்வன். விமல் டேவிட்
சகோ. கனீஷ் ஜோஸ்வா அமலன்
செல்வன். ரான்கின் ஜோனு ராபின் ராஜ்
செல்வி. குமாரி ராஜன்
சகோ. எட்வர்ட் சந்தோஷ்
செல்வி. ஷாரோன் கீர்த்தனா கிறிஸ்டோபர்
செல்வி. ரீனி ரேய்ச்சல் வில்சன்
சகோதரி. விஜயகுமாரி சுந்தர்ராஜ்
செல்வி. சோனியா மேரி வேளாங்கண்ணி
சகோ. மகேஷ்ராஜ்
சகோ. ஃபிராங்ளின் டினோ
சகோதரி. லாவண்யா வினோத்
செல்வி. இபிஜா ஏஞ்சல் ஜெயக்குமார்
செல்வி. ஹான்ஸிகா சாம் ஆனந்த்
சகோதரி. ஹேனா ஜோன் வினீஷ்

## இந்த மாதம் திருமண நாளை சிறப்பிக்கிறவர்கள்

உன் சந்ததிக்குள் பூமியிலுள்ள சகல ஜாதிகளும் ஆசீர்வதிக்கப்படும் (ஆதி .22:18)

திருமதி & திரு. ஜிவல் சிங்
திருமதி & திரு. ஸ்டீபன்
திருமதி & திரு. அருண் இம்மானுவேல்
திருமதி & திரு. பால் டேனியல்

# 2023 ஏப்ரல் மாத நிகழ்ச்சி நிரல்

## ஞாயிறு ஆராதனை மாலை 5:00 முதல் 6:30 வரை

| நாள் | ஆராதனை | செய்தி |
|---|---|---|
| 02/04/2023 | குருத்தோலை ஞாயிறு ஆராதனை | |
| 09/04/2023 | ஈஸ்டர் ஆராதனை | |
| 16/04/2023 | சகோ.பிரசாத் | பாஸ்டர்.ஆமோஸ் |
| 23/04/2023 | சகோ.பிராங்கிளின் | பாஸ்டர்.ஆமோஸ் |
| 30/04/2023 | சகோ.ஜாண்கேஸ்டன் | சகோ.பக்தராஜ் |

## வெள்ளி ஆராதனை மாலை 4:00 முதல் 6:00 வரை

| நாள் | ஆராதனை | செய்தி |
|---|---|---|
| 07/04/2023 | புனித வெள்ளி ஆராதனை | |
| 14/04/2023 | சகோ.சுகுமார் | பாஸ்டர்.ஆமோஸ் |
| 21/04/2023 | உபவாச திருவிருந்து ஆராதனை | |
| 28/04/2023 | சகோ.ஏசுரெத்தினம் | சகோ.ஜெகநாதன் |

**13/04/2023 அன்று முழு இரவு ஜெபம் ஆராதனை**

இடம் – பாஹீலில் உள்ள ஜெப வீடு

நேரம்– இரவு 10:00 முதல் அதிகாலை 1:00 மணிவரை

**15/04/2023 அன்று சகோதரிகள் ஐக்கிய கூடுகை**

இடம் – பாஹீலில் உள்ள ஜெப வீடு

நேரம்– மாலை 6:30 முதல் இரவு 8:00 மணிவரை

(வேத வினா பகுதி– அப்போஸ்தலர்)

**28/04/2023 அன்று வாலிபர் ஐக்கிய கூடுகை**

இடம் – பாஹீலில் உள்ள ஜெப வீடு

நேரம்– மாலை 6:30 முதல் இரவு 8:00 மணிவரை

(வேத வினா பகுதி–எபிரெயர் & யாக்கோபு)

# 2023 ஏப்ரல் மாதத்திற்கான வேத வினா!

**கீழ் கண்ட கேள்விகளுக்கு சரியான பதிலை வசனம் மற்றும் அதிகாரத்துடன் குறிப்பிடவேண்டும்**



**1.கேபார் நதியண்டையில் காணப்பட்ட ஜீவன் எது?**

**2.இஸ்ரவேலின் கேட்டுக்கு காரணம் என்ன?**

**3.தானியேலை பார்க்கிலும் ஞானவான் யார்?**

**4.பார்வோன் ராஜாவின் மேல் யாருடைய பட்டயம் வரும் என்று கர்த்தர் சொன்னார்?**

**5.யார் யாருடைய கோல்கள் ஒன்றாயின?**

**6.இஸ்ரவேலுக்கு அடையாளமாக கர்த்தர் யாரை வைத்தார்?**

**7.என் அக்கா சமாரிய, என் தங்கை சோதோம், அப்படியானால் நான் யார்?**

**8.சூரியனை வணங்கினவர்கள் எத்தனை பேர்?**

**9.தேசதுரோகம் பண்ணினால் கிடைக்கும் தண்டனை என்ன?**

**10.உறைக்குள் திரும்பாத ஒன்று அது யாரை சங்கரிக்கும்?**

**11.தொழில்களுக்கேற்ற நகரம் எது?**

**12.கர்த்தர் நியமித்த மேய்ப்பர்களுக்கெல்லாம் மேய்ப்பர் யார்?**

**13.எரிச்சலுண்டாக்குகிற விக்கிரகம் எங்கே இருந்தது?**

**14.எந்த பழமொழியை இஸ்ரவேலில் இனி சொல்வதில்லை?**

**15.எகிப்தியரின் பூர்வ தேசம் எது?**

**விடைகளை வருகின்ற** 20-04-2023**க்குள்**
(WhatsApp #**65040638**) **என்ற எண்ணுக்கு பெயருடன் குறிப்பிட்டு அனுப்பும்படி கேட்டுக் கொள்ளப்படுகிறீர்கள். வேதாகமத்தில் எசேக்கியேல் 8–37 ஆகிய அதிகாரங்களில் பதிலை கண்டுபிடிக்கவும்.**

**– – –தேடுங்கள், அப்பொழுது கண்டடைவீர்கள்; –மத்தேயு 7:7**

## 2023 – மார்ச் மாத வேத வினாவுக்கு விடை

1.யோயாக்கீமின் குமாரன் கோனியா (எரேமியா 22:24)
2.கர்த்தருடைய உக்கிரம் (எரேமியா 6:11)
3.கோதுமை, முள்ளுகள் (எரேமியா 12:13)
4.கோராவாரிக் காற்று (எரேமியா 30:23)
5.எரேமியா 9:4
6.இருதயம் (எரேமியா 17:9)
7.யோசியாவின் குமாரன் சல்லூம் (எரேமியா 22:11)
8.மண்பாண்டம் (எரேமியா 32:14)
9.யூதர்கள் (எரேமியா 24:5)
10.துஷ்ட வம்சத்தில் மீந்திருக்கிற யாவருக்கும் (எரேமியா8:3)
11.தேவர்களின் இல்லம் (எரேமியா 11:13)
12.பஸ்கூர் (எரேமியா 20:2)
13.யூதாவின் நகரத்தில் தரிக்கிறவன் (எரேமியா 21:9)
14.செப்பனியா (எரேமியா 29:25)
15.எருசலேம் (எரேமியா 6:6)

## 2023– மார்ச் மாத வேத வினாவுக்கு பதில் எழுதியவர்கள்

Sis.சுகந்தி தம்பு குமார்
Sis.நித்யா ஜோன்ஸ்
Sis.மெர்ஷிலின்தயா ஏசுரெத்தினம்
Sis.வனித்தா
Sis.ஜீனா சதீஷ்
Sis.சுபா ஸ்டீபன்
Bro.எபிநேசர்
Bro.எட்வின்

அப்போது அவனுடைய தாத்தா, தன் அருகில் இருந்த கரிகள் நிறைந்த கூடையிலிருந்து கரியை அனல் மூட்டும்படியாக அடுப்பில் போட்டு விட்டு, வெறும் கூடையை அவனுடைய கையில் கொடுத்து, 'நீ அருகில் உள்ள ஆற்றில் இருந்து தண்ணீரை இந்த கூடை நிறைய எடுத்துக் கொண்டு வா' என்று அனுப்பினார். அதன்படி பேரன் அந்த கூடையை எடுத்துக் கொண்டு ஆற்றுக்குப் போய் தண்ணீர் கொண்டு வரும்போது, அவன் வீட்டிற்கு வருவதற்க்குள் தண்ணீர் எல்லாம் சிந்திவிட்டிருந்தது. தாத்தா அதை பார்த்து சிரித்தபடி,

'நீ இன்னும் கொஞ்சம் வேகமாக வரவேண்டியதாக்கும்' என்று கூறி மீண்டும் அவனை தண்ணீர் கொண்டு வந்தாலும் , அவன் வீடு வருவதற்குள் அதிலிருந்து தண்ணீர் ஒழுகியிருந்தது. அதை பார்த்த பேரன், 'இந்த கூடையில் தண்ணீர் கொண்டு வருவது மிகவும் கஷ்டம், நான் ஒரு பக்கெட்டில் கொண்டு வருகிறேன் என்றான். தாத்தா, 'எனக்கு பக்கெட்டில் தண்ணீர் கொண்டு வர வேண்டாம், எனக்கு இந்த கூடையில்தான் தண்ணீர் வேண்டும்' என்று கூறினார். பேரன் மீண்டும் தண்ணீர் எடுத்து வரப்போனான். தாத்தர் வெளியே நின்று அவன் போவதை பார்த்துக் கொண்டிருந்தார். பேரன் தன் தாத்தாவிற்கு முன்பாக வேகமாக ஓடி, தண்ணீரை மொண்டு வீட்டிற்கு ஓடி வருவதற்குள் தண்ணீர் எல்லாம் சிந்திப் போனதை கண்டு, தன் தாத்தாவிடம், 'பார்த்தீர்களா? நான் எத்தனை வேகத்துடன் போய் தண்ணீர் கொண்டு வந்தேன், ஆனால் எல்லாம் வீண் என்று? இந்தக் கூடையப் பார்' என்றார். அப்போதுதான் அந்த பேரன் அந்தக் கூடையைப் பார்த்தான். அழுக்கு நிறைந்திருந்த, கரிகளால் கறுப்பாயிருந்த அந்தக் கூடை இப்போது பளீரென்று அதன் உட்புறமும் வெளிப்புறமும் சுத்தமாகி இருந்தது. தாத்தர் சொன்னார்? 'இதைப்போலத்தான் நீ வேதம் வாசிக்கும்போது, ஒன்றும் புரியமலிருக்கலாம், அல்லது மறந்துப் போகலாம், ஆனால் நீ வேதம் வாசிக்கும்போது, ஒன்றும் புரியமலிருக்கலாம், ஆனால் நீ வாசிக்க வாசிக்க அது உன்னை உட்புறத்திலும், வெளிப்புறத்திலும் சுத்தமாக்குகிறது.

ஏனென்றால் பரிசுத்த வார்த்தைகள் ஒவ்வொன்றும் புடமிடப்பட்ட, ஜீவனுள்ள வார்த்தைகள், ஆகையால் நீ தொடர்ந்து வேத்ததை தினமும் வாசி' என்று கூறினார்.

# THE FIVE FINGER PRAYER

Prayer is very important for a child of God. It is a communication between a child and God. Prayer brings victory in our lives.

Let us follow this method of five finger prayer to pray.
When we put your hands together to pray.
The finger closest to you in the THUMB
The next finger is the POINTER
The next finger is the TALLEST
The next finger is the RING
The next finger is the LITTLE OR PINKY




## THUMB

Your thumb is the closest to you. Pray for those closest to you, your loved ones. For example Mom, Dad, Grandmother, Grandfather, Brother and Sister.

## POINTER

The pointer finger reminds us of those who instruct. Pray for those who teach, instruct and heal.

For example teachers, doctors, ministers.

## TALLEST

The tallest finger reminds us of our leaders those who are in charge.
Pray for the important leaders in your life.
For example President, Prime minister, Officers and School Principal.

## RING

The ring is the weakest finger
Pray for those who are weak, poor, in trouble or sick.

## PINKY

The pinky is the smallest finger.
Pray for your needs last because your prayers should be more about others.

## PALM

Give thanks for all the blessings you have been given.
MAY THE LORD GIVE YOU THE GRACE TO GROW MORE IN PRAYER AND BE BLESSED IN HIM.

## சகோதரிகள் பகுதி

### விசுவாசமும், அபிஷேகமும் . . .

கிறிஸ்துவுக்குள் பிரியமான சகோதரிகளுக்கு இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் அன்பின் வாழ்த்துக்கள்.
"விசுவாசிக்கிறவனுக்கு எல்லாம் கூடும்" மாற்கு 9:23

பரிசுத்த ஆவியானவருக்குள் விசுவாசம் என்னும் வரமும் மறைந்திருக்கிறது. நாமெல்லாரும் ஆண்டவராகிய இயேசுவை

மனப்பூர்வமாய் விசுவாசிக்கிறவர்களாய் இருந்தாலும், பிரச்சனைகளும், போராட்டங்களும் உபத்திரவங்களும் நிறைந்த உலகத்தில் தான் வாழ்கிறோம். நம்முடைய விசுவாச ஜீவியத்திற்கு அடிக்கடி பரீட்சைகள் ஏற்படும் போது அநேகர் அப்பரீட்சையில் ஜெயக்கிறிஸ்துவை வெளிப்படுத்த முடியாமல் பரிதபித்துக் கொண்டிருக்கிறோம்.

கர்த்தரையே நாம் நம்பும்போதும் அவரையே நாம் சார்ந்து கொள்ளும்போதும் நமக்குள் உள்ள விசுவாசம் மேலோங்குகிறது. அதே வேளையில் நம்முடைய பார்வையை சற்றுத் திருப்பி உலகத்தையும், உலகத்தில் உண்டான உபத்திரவங்கள் உற்று நோக்கும் போது உபத்திரவம் தான் மேலோங்குகிறது.

“பேதுரு படவை விட்டிறங்கி, இயேசுவினிடத்தில் போக ஜலத்தின் மேல் நடந்தான். காற்று பலமாயிருக்கிறதைக் கண்டு, பயந்து, அமிழ்ந்துபோகையில்: ஆண்டவரே, என்னை ரட்சியும் என்று கூப்பிட்டான்.” – மத 14:29,30.

எனக்கன்பானவர்களே! இயேசுவைப் போல தண்ணீரில் பேதுரு நடந்தது உண்மைதான். ஆனால் வேதம் சொல்லுகிறது பலமான காற்றறைக் கண்டு அவன் அமிழ்ந்து போனான்.

ஆனால் அபிஷேகத்தைப் பெற்றுக் கொண்டபோது அவனுக்குள் விசுவாச வரம் பெருகியது. இந்த வரத்தால் பேதுரு அநேக அற்புதங்களைச் செய்து தேவனுக்காக வல்லமையான ஊழியத்தை செய்தான்.

“விசுவாசித்தேன், ஆகையால் பேசினேன் என்று எழுதியிருக்கிறபடி, நாங்களும் அந்த விசுவாசத்தின் ஆவியை உடையவர்களாயிருந்து, விசுவாசிக்கிறபடியால் பேசுகிறோம்.” II கொரி 4:13.

பரிசுத்த ஆவியின் நிறைவினால் உண்டாகக் கூடிய ஒவ்வொரு ஆசீர்வாதங்களையும் நாம் யோசிக்கவும், தியானிக்கவும்

ஆரம்பித்தால் நம்முடைய உள்ளம் அவரது ஆவியால் பூரிப்படையும். நம்மில் அநேகர் அபிஷேகம் என்றால் குதிப்பதும், ஆடுவதும், நான்கு ஐந்து வார்த்தைகளை பேசுவதுமே என நினைக்கிறார்கள். சிலர் பற்பல பாஷைகளைப் பேசுவதிலே மட்டும் திருப்தியடைந்து விடுகிறார்கள்.

ஆனால் ஆவியினாலே விசுவாச வரம் எப்படி நமக்குள்ளே செயல்படுகிறது என்பதை உங்களுக்கு விசுவாசிக்கிறேன். ஒரு மாட்டு வண்டி ஓட வேண்டுமானால் அதற்கு அச்சாணி எவ்வளவு அவசியமோ அதைப் போல ஆவிக்குரிய ஜீவியத்தில் நாம் ஒழுங்காகவும், நிதானமாகவும் ஓடுவதற்கு விசுவாசம் அவசியமே.

கத்தோலிக்க மதத்திலிருந்து புரொட்டஸ்டண்ட் என்ற பேரியக்கத்தை உருவாக்கின புகழ் பெற்ற தேவ மனுஷன் மார்ட்டின் லூத்தரையே சாரும். இவ்வளவு பெரிதான ஊழியத்தின் வெற்றியின் இரகசியம் ஆழமான விசுவாசமே "விசுவாசத்தினாலே நீதிமான் பிழைப்பான்" எபி -10:38 என்ற வல்லமையான வாக்குத்தத்தை ஒவ்வொரு நாளும் ஜெப வேளையில் சொல்லி அறிக்கை செய்து தன்னுடைய ஊழியத்தில் பெரிதான காரியங்களை கண்டார்.

ஆகவே ஒப்பற்ற ஆவியின் வரமாகிய விசுவாசத்தை நாம் பெற்றுக் கொள்ள நமக்குள் இருக்கிற ஆவியின் வரத்தை இன்று அனல் மூட்டி எழுப்புவோம்.

நாமும் விசுவாச வீரர்களை போல விசுவாசத்தால் அரிய பெரிய காரியங்களைச் செய்து தேவனுக்காக எழும்பிப் பிரகாசிக்க நாடுவோம். "விசுவாசிக்கிறவனுக்கு எல்லாம் கூடும்".

ஆவியானவரே! விசுவாசத்தின் ஆவியினால் எங்களை நிரப்பி உமக்காக பெரிய காரியங்களைச் செய்ய கிருபை தாரும். ஆமென்.

கர்த்தரின் பனியில்,
சகோதரி.எப்சிபா ஸ்டீபன்

# கடந்த மாத நிகழ்வுகள் தங்கள் பார்வைக்கு சில


















# ஊழியர்களுக்காக ஜெபியுங்கள்

## செயற்குழு உறுப்பினர்கள்

சபை முதன்மை ஊழியர்

**சகோ. ஜெயசேகர்**

**96646444**

செயலாளர்

**சகோ. இயேசு ரெத்தினம்**

**23924262 - 97545812**

பொருளாளர்

**சகோ. ஜெகநாதன்**

**66889535 - 98852812**

பெண்கள் ஐக்கிய தலைவி

**சகோதரி . எப்சிபா ஸ்டீஃபன்**

**67792009 - 56640551**

வாலிப ஐக்கிய தலைவர்

**சகோ. பிரசாத் சுந்தரேசன்**

**60781168**

Church Website Address - ahmaditamilchurch.com

Church 'E' mail ID - ahmaditamil.kw@hotmail.com

Church Postel Address

Your name - Po. Box no 46795. 64018, fahaheel ,Kuwait

தங்களது ஜெப விண்ணப்பங்கள்
எதுவாக இருந்தாலும்
எங்களுக்கு தெரிவிக்கவும்
உங்களுக்காக ஜெபிக்க
ஒரு குழு ஆயத்தமாய் இருக்கிறது.

Private Circulation only